Cr.M.P.No.1642/2024
in CC.No.110/2021
PW1 – திருமதி.மகேஸ்வரி

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** எனது கணவர் காவல் துறையில் சார்பு ஆய்வாளராக இருந்து பணி ஓய்வு பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

**2.** எதிரி எனது கணவரின் தம்பி. அவர் கடற்படையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுள்ளார். இருவருக்கும் பாகப்பிரிவினை சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது.

**3.** 15.04.2020 ம் தேதியன்று எனது மகன் எதிரியை அருவாளால் வெட்டியதாக குற்ற எண்.95/2020 பதிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் CC.No.35/2021 ஆக நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

**4.** இவ்வழக்கு சம்பவம் நடக்கும்போது எனது மகன் சிறையில் இருந்தார் என்றால் சரிதான்.

**5.** சம்பவம் நடந்த தேதியில் எதிரிக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல.

**6.** எதிரி 15.04.2020 முதல் 18.04.2020 வரை ASSI மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரியல்ல.

**7.** என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் கொடுக்கப்பட்டது. அதிலுள்ள கையொப்பம் என்னுடையது.

**8.** நான் 16.04.2020 ம் தேதியன்று 4 நபர்கள் மீது ஒரு புகாரும், 18.04.2020 ம் தேதியன்று எதிரி மீது வேறு ஒரு புகாரும் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 2 புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது.

**9.** எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொள்ளவில்லை.

**10.** நான் முதலில் கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். 17 ம் தேதி நடந்த சம்பவத்திற்கு 18 ம் தேதி புகார் அளித்தேன்.

**11.** நான் அளித்த புகாரில் எதிரி என்னை ஆயுதத்தால் குறிப்பிடவில்லை

என்றால் சரிதான். சம்பவம் எனது வீட்டின் முன் நடந்தது.

**12.** சம்பவம் காலை 08.00 மணிக்கு எனது வீட்டின் முன்பு நடந்தது. என்னுடன் நாகேஸ்வரி இருந்தார். நாகேஸ்வரி எனது தம்பியின் மனைவி. எனது தம்பி வீடு எனது வீட்டிலிருந்து 5, 6 வீடுகள் தள்ளி உள்ளது.

**13.** எதிரியின் வீடும், எனது வீடும் அருகருகே அமைந்துள்ளது. எங்களைத்தவிர வேறு யாரும் சம்பவ இடத்தில் இல்லை.

**14.** சம்பவம் நடந்த அன்று புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். ஊரில் பேசி முடித்துக்கொள்வதாக கூறியதால் அன்று புகார் அளிக்கவில்லை.

**15.** எனது மகனை நான் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**16.** எதிரி எனது தலை முடியை பிடித்து இழுத்தார். தரையில் உரசியதால் சிராய்பு காயம் ஏற்பட்டது. எனது கணவரின் பின்னிட்டு ஆலோசனையின் பேரில் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**17.** நான் கூறுவதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது கணவரின் செல்வாக்கை பயன்படுத்தி எதிரியின் மீதுள்ள முன்பகையை மனதில் வைத்து எதிரியை பழிவாங்க வேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் அளித்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)